**22.10.2025**

**O.S.No.100/2014**

**வா.சா.3 : சௌந்தராஜன்**

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**:-**

1) எனது பூர்வீகம் சந்திரகிரி என்றால் சரிதான். வழக்கு சொத்து அந்த ஊரில் தான் உள்ளது. இந்த வழக்கின் வாதி எனது மனைவி என்றால் சரிதான். நான் எனது மாமானாரின் தங்கை மகன் என்றால் சரிதான். வாதி எனது மாமன் மகள் என்றால் சரிதான். மருதை கவுண்டருக்கு நான் மகள் வழி பேரன். மருதை கவுண்டர் சொத்தை தான் 1999 பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை எழுதியபோது முன்னிருந்து சாட்சி கையெழுத்து போட்டதும் நான் தான். மருதை கவுண்டருக்கு 2 மகன்கள் செங்கமலை கவுண்டர் மற்றும் பாலுசாமி. செங்கமலை கவுண்டரின் மகன் தான் வெங்கடேசன் ஒரே மகன். பாலுசாமிக்கு ஒரே மகள் வாதி சாந்தி.

2) எனக்கு அந்த குடும்ப சொத்து முழுவதும் தெரியும் என்றால் சரிதான். 1999ல் பாகப்பத்திரம் எழுதும் மேற்படி சொத்து வெங்கடேசனின் அனுபவத்தில் இருந்தது என்று சொன்னால் இல்லை பொதுவில் தான் இருந்தது. 1999ல் எழுதிய பாகப்பத்திரத்தில் மீதி சொத்து பாகம் பிரிக்காமல் இருக்கிறது என்ற வாசகம் இல்லை என்றால் நான் படித்து பார்க்கவில்லை. நான் மேற்படி பாகப்பத்திரத்தில் நான் பத்திர அலுவலகத்திலும் சார்பதிவாளர் அலுவலகத்திலும் இரண்டு இடங்களிலும் நான் தான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். எனது மனைவி சார்பாக நான் தான் பத்திரத்தை எழுதினேன் என்றால் சரிதான். மேற்படி பாகப்பத்திரத்தில் தற்போது பிரித்து கொள்ளலாம் மீதி சொத்துக்களை பின்னர் பார்த்துக்கொள்ளாலம் என்று நான் சொல்லும் வாசகம் பத்திரத்தில் இல்லை என்று சொன்னால் நான் படித்து பார்க்கவில்லை. நான்தான் மேற்படி பாகப்பத்திரத்தை முன்னின்று தயார் செய்து விட்டு தற்போது வாதிக்கு ஆதரவாக மேற்படி பாகப்பத்திரத்தை படித்து பார்க்காமல் கையெழுத்து போட்டேன் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3) மேற்படி பாகப்பத்திரத்தில் உள்ள வாசகங்கள் சரிதானா என்றால் இல்லை. அதில் சொல்லி உள்ள படி தான் பாகம் பிரித்து கொண்டோமா என்றால் இல்லை. பின்னாள் பிரித்து கொள்ளலாம் என்று பேசிக்கொண்டோம். எனது மனைவிக்கு பிரிந்தது 2 ஏக்கர் 15 செண்ட் நஞ்சை நிலம் என்றால் சரிதான். கிணறு மற்றும் பம்பு செட் உள்ளது. வெங்கடேசுக்கு பிரிந்தது 1 ஏக்கர் 66 செண்ட் அது முக்கிய சாலையை ஒட்டி அமைந்துள்ளது. மேற்படி 1 ஏக்கர் 66 செண்ட்டுக்கு பம்பு செட் கிணறு இல்லை என்று சொன்னால் உள்ளது. நான் இந்த வழக்கில் காட்டி உள்ள வீடு கிராம நத்தம் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. சாட்சி பின்னிட்டு அதற்கு பத்திரம் உள்ளது என்று சொல்கிறார். மேற்படி நகலை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். மேற்படி வீட்டின் பத்திரத்தின் நகலை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வில்லங்க சான்று போட்டு பார்க்கும்போது தான் தெரிய வந்தது. ரோட்டு ஓரத்தில் உள்ள காட்டையும் வீட்டையும் பின்னர் பிரித்து கொள்ளலாம் என்று சொல்லி கொண்டோம்.

4) மேற்படி வீட்டின் சர்வே எண்.133/6 ல் உள்ளது என்றால் தெரியாது. மேற்படி சொத்து அவர்களுக்கு ஒதுககப்பட்ட இடத்தில் தான் உள்ளது என்றால் அது அவர்கள் முப்பாட்டனார் சம்பாதித்த சொத்து. தாவா சொத்து மருதை கவுண்டர் அவருடைய பேரன் வெங்கடேசனுக்கு 40 வருடங்களுக்கு முன்பு ஒதுக்கி கொடுத்துவிட்டார் என்றும் என்றும் அது அவருக்கு தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. வெங்கடேசன் ஊரிலேயே இல்லை. 1999 ல் தான் வந்தார். நான் சொல்வது தவறு என்றும் மருதை கவுண்டருக்கு ஒரே பேரன் வெங்கடேசன் தான் என்றும் அதனால் தான் 1999 ல் பாகப்பிரிவினை பத்திரத்தில் இந்த சொத்தை சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வெங்கடேசன் ஊரிலேயே இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வெங்கடேசன் வேறு ஜாதி சேர்ந்த பெண்ணை திருமணம் செய்து கொண்டதால் அவரை ஊரை விட்டு ஒதுக்கிவிட்டனர். நான் சொல்வது தவறு என்றும் வெங்கடேசனை ஊரை விட்டு ஒடி விட்டார் என்றும் தாவா

சொத்தில் தான் அவர் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. 1999 ல் எழுதிய பாகப்பத்திரம் தான் ஊர்ஜீதமானது என்றும் மேலும் சில சொத்துக்களை பின்னர் பிரிக்கலாம் என்று சொல்லி உள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை 1999 ல் பாகம் பிரிக்கும்போது மீதி தாவா சொத்தை பின்னர் பங்கிட்டுகொள்ளலாம் என்று சொல்லியதாக எனது மனைவிக்காக நான் வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தாவா சொத்து எனது மனைவிக்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றும் அது வெங்கடேசனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. மேற்படி தாவா சொத்து பாலுசாமி பெயரிலோ எனது மனைவி பெயரிலோ எந்த ஒரு வருவாய் ஆவணங்களும் உள்ளதா என்றால் இல்லை. மருதை கவுண்டர் பெயரில் தான் இருந்தது. நான் தாவாவில் சொல்லி உள்ள வீட்டு மனைகள் அனைத்தும் பிரதிவாதியின் தனிப்பட்ட நத்தம் சொத்து என்றும் அதை மருதை கவுண்டரின் குடும்ப சொத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல. தற்போது அந்த வீடு இடிந்து மண்ணாக தான் உள்ளது. அந்த வீடு 100 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது. நான் சொல்வது போல தாவா வீடு 100 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனவே நான் எனது மனைவிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் தாவா சொத்தில் எனது மனைவிக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.10.22 17:42:08 +0530

**Subordinate Judge, Attur.**